III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.127/2017

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt.R.Shanthi, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 24-01-2020

| | | | |
|---|---|---|---|
| Name | :K.K. Ramesh | Caste | |
| Father's/Husband's Name | :K. Kannan | Calling : | |
| Age | : | Religion : | |
| Village | : | Taluk : | |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u> வங்கியிலிருந்து கடன் வாங்கி தருவதாக சொல்லி தான் பிரதிவாதியின் மனைவியிடமிருந்து அசல் ஆவணங்களை நான் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்களின் பிரதிவாதியின் வங்கி கணக்கு பட்டியல் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் ஞாபகமில்லை. பிரமாண வாக்குமூலத்தில் வா.சா.ஆ.7 பிரதிவாதியின் வங்கிக் கணக்கு பட்டியல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி வங்கி கணக்கு பட்டியல் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் கடன் பெறுவதற்காக தான் அந்த வங்கிக் கணக்கு பட்டியல் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எந்தெந்த தேதியில் பிரதிவாதியின் மனைவியிடம் நான் பணத்தை கொடுத்தேன் என்றால் 25/05/2014 ரூ.2/- இலட்சம் கொடுத்தேன் ஒப்பந்தம் போடும் தேதியான 07/05/2014 ல் ரூ.1 இலட்சம் கொடுத்தேன், 06/06/2014 ல் ரூ.1.50 இலட்சம் கொடுத்தேன், 24/06/2014 ல் ரூ.1.50 இலட்சம் கொடுத்தேன், 05/07/2014 ல் ரூ.2 இலட்சம் கொடுத்தேன், 30/07/2014 ல் ரூ. 2 இலட்சம் கொடுத்தேன், 09/08/204 ல் ரூ.1.50 இலட்சம் கொடுத்தேன், 25/08/2014 ல் ரூ.2 இலட்சம் கொடுத்தேன், 10/09/2014 ல் ரூ.1.50 இலட்சம் கொடுத்தேன். மேற்சொன்ன தொகைகளெல்லம் எதற்காக கொடுத்தேன் என்றால் அலமாதி ரோடு, வளனூர் பஞ்சாயத்து, அம்பத்தூர் வட்டம், திருவள்ளுர் மாவட்டத்தில் ஸ்ரீ அய்யப்பா நகரில் 1291 சதுர அடிகள் இடம் வாங்குவதற்காக கொடுக்கப்பட்டது அந்த சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் பிரதிவாதியின் பெயரில் உள்ளது மேற்சொன்ன தொகைகள் எல்லாம் யாரிடம் கொடுக்கப்படடது என்றால் முதலில் ரூ. 1 இலட்சம் அட்வான்ஸ் தொகையாக பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்டது அதன் பிறகு பிரதிவாதி டிரைவராக பணியாற்றுவதால் அவர் சொன்னதின் பேரில் பாக்கி அனைத்து தொகையும் பிரதிவாதியின் மனைவியிடம் கொடுக்கப்பட்டது. 8 தவணை தொகையையும்

பிரதிவாதியின் மனைவியிடம் கொடுத்த போது பிரதிவாதி உடன் இருக்கவில்லையா என்றால் அவர் இல்லாததால் தான் அவர் மனைவியிடம் கொடுத்தேன். ஒவ்வொரு முறையும் நான் பணம் கொடுக்க சென்ற போது பிரதிவாதி இல்லாததால் பிரதிவாதியின் மனைவியிடம் கொடுத்தேன் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பது சரிதான் தொகைகள் அனைத்தும் ரொக்கமாக தான் கொடுக்கப்பட்டது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் தவணை முறையாக பிரதிவாதியின் மனைவியிடம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் பணம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் தேதிகள் அதாவது 25/05/2014 அன்று ஞாயிற்றுக்கிழமை ஆகும் 05/07/2014, 09/08/2014 சனிக்கிழமைகளாக உள்ளது என்றாலும் அதனால் அந்த நாட்களில் பிரதிவாதி இல்லை என்று நான் சொல்வது சரியில்லை என்றால் நான் மறுக்கிறேன். தவணை தொகைகள் லட்சங்களில் கொடுத்திருப்பதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றாலும் குறிப்பிட்ட தொகைக்கு மேல் ரொக்கமாக கொடுக்கக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அதனால் அந்த சூழலில் ரொக்கமாக கொடுக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல ரூ.15 லட்சத்திற்கு வருமான வரி கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் காண்பித்துள்ளேன் அதற்குண்டான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தேவைப்படும் எனில் நான் தாக்கல் செய்கிறேன். ஒருவரிடம் கிரையம் வாங்கும் பொழுது அந்த கிரையத் தொகையை வேறு ஒரு நபரிடம் கொடுக்க முடியுமா என்றால் நான் பணம் கொடுத்தது பிரதிவாதியின் மனைவியிடம் தான் கொடுத்தேன். பணத்தை பிரதிவாதி தன் மனைவி பெற்றுக் கொள்ளலாம் என்று அதிகார பத்திரம் ஏதாவது எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை அந்த சூழலில் பிரதிவாதியின் மனைவியிடம் பணம் கொடுத்தேன் என்று சொல்வது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல பிரதிவாதி சொல்லி தான் பணத்தை கொடுத்தேன். வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.17 ரசீதுகள் யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் பிரதிவாதியின் மனைவி கனகம்பாள் தயார் செய்து எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார் அந்த நேரத்தில் நான் எங்கிருந்தேன் என்றால் பிரதிவாதியின் வீட்டில் தான் இருந்தேன் மேற்சொன்ன ரசீதுகள் அனைத்தும் ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். அனைத்து ரசீதுகளும் கையால' தட்டச்சு செய்யப்பட்டதாக தான் உள்ளது என்றால் சரிதான். நான் பணத்தை கொடுக்கும் போது பிரதிவாதியின் மனைவி தான் ரசீதுகளை தட்டச்சு செய்து கொண்டு வந்தார் என்ற விவரத்தினை பிராதிலோ பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை பிரதிவாதியின் மனைவிக்கு ஆங்கிலம் தெரியாது என்றாலும் அதனால் மேல் சொன்ன ரசீதுகளை பிரதிவாதியின்

மனைவி தட்டச்சு செய்து கொண்டு வர வாய்ப்பு இல்லை என்றாலும் அனைத்து ரசீதுகளும் வழக்கிற்காக என்னால் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.. 20/10/2014 ல் வா.சா.ஆ.19 வழக்கறிஞர் அறிவிப்பு கே. கே ரமேஷ் கண்ணன் என்ற பெயரில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அந்த அறிவிப்பு அனுப்பியது பழைய லெட்டர் பேட் ஆகும் 2005ல் நியுமராலஜின் படிபெயர் மாற்றம் செய்யப்பட்டது. கே, கே. ரமேஷ் கண்ணன் மற்றும் கே.கே ரமேஷ் ஒரே நபரை தான் குறிக்கும் 2005ல் பெயர் மாற்றம் செய்த பிறகு பழைய பெயரை வைத்து அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றாலும் அதனால் 2005க்கு பிறகும் பழைய பெயரை பயன்படுத்தியுள்ளேன் என்று சொன்னால் பழைய லெட்டர் பேடு பயன்படுத்தியுள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பு எப்போது அனுப்பப்பட்டது என்றால் 14/11/2014 என்று நினைக்கிறேன் சரியாக ஞாபகமில்லை. வா.சா.ஆ.16 நான் அனுப்பிய அறிவிப்பில் எந்தெந்த தேதியில் கிரையத் தொகை கொடுத்தேன் என்றும் எவ்வளவு கிரையத் தொகை யாரிடம் கொடுத்தேன் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான் மொத்தம் ரூ.15 இலட்சம் என்று குறிப்பிட்டுள்ளேன். வா.சா.ஆ.16 காசோலை சம்பந்தமாக அனுப்பப்பட்ட அறிவிப்பு என்று சொன்னால் சரியல்ல காசோலைக்காக மற்றும் சிவில் வழக்கிற்காகவும் சேர்த்து தான் அனுப்பப்பட்டது பிரதிவாதி மீது காசோலை சம்பந்தமான வழக்கு ரூ.15 இலட்சத்திற்கு தாக்கல˙ செய்துள்ளேன் இந்த வழக்கில் கண்டுள்ள தொகைக்கு தான் காசோலை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைப்பு.